# வட கன்னட ஜில்லாவில் ஹிந்தி எதிர்ப்பு.

———o———

சென்னை, ஜுன், 3.

தமிழ்நாட்டில் நடந்து வரும் ஹிந்தி எதிர்ப்பை "பம்பாய் சென்டினல்" பத்திரிகை வாயிலாக வாசித்தறிந்த சர்சா தோழர் எஸ். வி. காமத் பி. ஏ. (Hons) எஸ். டி சி. டி. அவர்கள் சென்னை ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டிக்காரியதரிசி தோழர் சிவானந்த அடிகளுக்கு ஒருகடிதம் எழுதியுள்ளார். அதன் சுருக்கம் பின்வருமாறு:-

"நான் தமிழ்நாட்டில் நடந்து வரும் ஹிந்தி எதிர்ப்பைப் பற்றிப் "பாம்பே சென்டினல்" பத்திரிகையில் பார்த்தேன். காங்கரஸ் திட்டத்திற்கு மாறாக ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கித் திராவிட மொழிகளில் உள்ள கலை, நாகரிகம் முதலியவற்றை அழிக்கப் பார்ப்பது மிகவும் அறியாமையாகும். இது காங்கரஸ்சாரின் நேர்மையற்ற தன்மையையே காட்டுகின்றது. ஹரிபுரா காங்கரஸ் கூட்டத்தலைவரின் அறிக்கையில் காங்கரஸ் திட்டங்கள் தெளிவாகக் காணப்படுகிறது. அதில் ஹிந்தியைப்பற்றி ஒன்றுமே இல்லை.

ஒருகாலத்தில் தென்திராவிடர்களுடைய நாகரிகமே எங்கும் பரவி இருந்தது. பின்னர் ஆரியர் நாகரிகத்தினால் சிறிது அழிவு ஏற்பட்டது. இப்போது திராவிட நாகரிகத்திற்கு முற்றுமே அழிவு தேடுவதற்காகவே கட்டாய ஹிந்தி நுழைக்கப்படுகிறது. கட்டாய ஹிந்தி நிலைத்து விட்டால் தென்னாட்டவர்களாகிய எங்களுடைய எல்லா உரிமைகளும் பறிக்கப்படும் என்பது நிச்சயம். அது மட்டுமல்லாமல், தமிழ் தெலுங்கு, கன்னடம் முதலான மொழிகளின் வளர்ச்சி அறவே அழிந்து விடும். ஆகவே, தீவிர முயற்சி எடுத்து ஹிந்தி நுழைப்பைத்தடுத்தே தீர வேண்டும். கன்னட நாட்டிலும் நாங்கள் ஹிந்தி ஒழிப்புக்கமிட்டி ஒன்று ஏற்படுத்தி வேலைசெய்ய முடிவு செய்துள்ளோம். கமிட்டியாரால் கையாளப்படும் வேலைத்திட்டங்கள் அடங்கிய ஓர் அறிக்கை அனுப்பி வைக்கவும், அதோடு, ஹிந்தி எதிர்ப்பின் காரணங்களைக் குறிக்கும் அறிக்கைகள் இருந்தால் அவற்றையும் அனுப்பி வைக்கவும்.

காங்கரஸ் பத்திரிகைகள் ஹிந்தி எதிர்ப்புச் சம்பந்தமான அறிக்கைகளைப் பிரசுரிப்பதில்லை என்பதை நான் நன்கறிவேன். ஆகையால், துண்டு விளம்பரங்களும், புத்தகங்களும் பெருவாரியாக அச்சிட்டுப் பரப்புதல் வேண்டும். வெற்றியடையும் வரைதளராதுவேலைசெய்ய வேண்டும். நான் என்னுடைய முழுமனதுடன் தங்களுடன் ஒத்துழைத்து ஹிந்திப் போரில் வெற்றியடையும் வரை பின்வாங்கப் போவதில்லை என்பது உறுதி."

குறிப்பு:— மேற்கண்ட கடிதத்தின் வேண்டுகோளுக்கு இசைந்து, ஹிந்தி எதிர்ப்பைப் பற்றிய காரணங்கள் காணப்படும் அறிக்கைகளைத் தோழர் எஸ். வி. காமத் அவர்களுக்குச் சென்னை ஹிந்தி ஒழிப்புத் தலைமை நிலையத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறது.

---

சுப்பைய செட்டியாருக்கும், திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

விவாக வைபவத்திற்கு பிரபலஸ்தர்களும், சர்க்கார் ஊழியர்களும், பல இயக்கத் தோழர்களும் ஏராளமாக விஜயஞ்செய்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் பலர் மணமக்களுக்குப் பல விலையுயர்ந்த பரிசுகளை வழங்கி தம்பதிகளை ஆசீர்வதித்தார்கள்.